## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2024 நவெம்பரில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதல்களை எடுத்துக்காட்டுகின்றன

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2024 நவெம்பரில் 53.3 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** அனைத்து துணைச் சுட்டெண்களிலுமிருந்து கிடைத்த சாதகமான பங்களிப்புகளுடன் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் தயாரிப்பு நடவடிக்கைகளில் விரிவடைதலை இது எடுத்துக்காட்டுகின்றது.

புதிய கட்டளைகள் துணைச் சுட்டெண், புடவை மற்றும் அணியும் ஆடைத் துறையினால் முதன்மையாகத் தூண்டப்பட்டு மாதகாலப்பகுதியில் விரிவடைந்தது. மேலும், உற்பத்தி துணைச் சுட்டெண்ணில் விரிவடைதலுக்கு உணவு மற்றும் குடிபானங்கள் துறை பிரதான காரணமாக அமைந்தது. மேலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்களுடன் அணிசேர்ந்து தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளில் இருப்பு துணைச் சுட்டெண்கள் மாதகாலப்பகுதியில் விரிவடைந்து காணப்பட்டன. அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் நீட்சியடைந்து காணப்பட்டது.

***கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு***

| மாறி | ஒத். | நவெ. | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **58.1** | **53.3** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 58.5 | 53.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 62.6 | 52.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 52.0 | 52.0 | = | அதிகரிக்கின்றது, அதே வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 62.5 | 57.6 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 55.1 | 54.1 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கை சாதகமாகக் காணப்படுகின்றது. எனினும், சில தயாரிப்பாளர்கள் விசேடமாக உணவுத் துறையில் உள்ளவர்கள் பல முக்கிய மூலப்பொருட்களின் மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல் பற்றி கரிசனைகொண்டுள்ளனர்.

**தயாரிப்பு கொ.மு.சு 53.3**

**2024 நவெம்பர்**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகளாவிய தோற்றப்பாடு:

கொமுசு தயாரிப்புத் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | வீழ்ச்சியிலிருந்து நடுநிலை |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **சீனா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய அமெரிக்கா** | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 திசெம்பர் 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*


[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2024 நவெம்பரில் 60.5 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்த வியாபார நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு பணிகள் நடவடிக்கைகளில் மேலும் விரிவடைதலை எடுத்துக்காட்டியது.**

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2024 நவெம்பர்**
**60.5**

வியாபார நடவடிக்கைகளில் விரிவடைதலானது முக்கிய துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளினால் தூண்டப்பட்டிருந்தது. அதற்கமைய, அதிகரித்த கடன்வழங்கல் நடவடிக்கைகளுக்கு மத்தியில் நிதியியல் பணிகளின் வியாபார நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க மேம்பாட்டினை அதிகரித்தன. மேலும், சுற்றுலாப் பயணி வருகைகளில் அதிகரிப்புக் காரணமாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் துறைகளின் வியாபார நடவடிக்கைகளும் கணிசமான மேம்படுதலைக் காண்பித்தன. அதேவேளை, விற்பனைகள் மீது சாதகமற்ற வானிலையின் பாதகமான தாக்கத்திற்கு மத்தியில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக வியாபார நடவடிக்கைகளும் பண்டிகைப் பருவகாலத்தை எதிர்பார்த்து அதிகரித்தன.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

முதன்மையாக நிதியியல் பணிகள் அத்துடன் தங்குமிடம், உணவு மற்றும் குடிபான நடவடிக்கைகளில் கணிசமான விரிவடைதல்களைக் காரணமாகக் கொண்டு புதிய வியாபாரங்கள் 2024 நவெம்பரில் அதிகரித்தன.

2024 நவெம்பரில் அதிகரித்த சுற்றுலாப் பயணி வருகைகள் மற்றும் பண்டிகைப் பருவகாலம் என்பவற்றுடன் வளர்ச்சியடைகின்ற பொருளாதார நடவடிக்கைகளுக்கு இடமளிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்புகளுக்கு மத்தியில் தொழில்நிலை அதிகரித்த அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***

| மாறி | ஒக். | நவெ | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **60.3** | **60.5** | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 58.8 | 61.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 47.9 | 53.1 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 48.9 | 48.4 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 77.6 | 82.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தொடர்ந்து வருகின்ற மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் இடம்பெறுகின்ற சுற்றுலாப் பருவகாலம் மற்றும் வரவிருக்கும் பண்டிகைப் பருவகாலம் என்பன மூலம் தூண்டப்பட்டு உயர்வான வீதத்தில் தொடர்ந்தும் மேம்பட்டன.

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, அதே வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்', 2024 திசெம்பர் 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.
பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.